[1979 பிப்ரவரி 14

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சின்னசேலம் ஆட்டுப்பண்ணையின் மொத்த பரப்பளவு எவ்வளவு? அங்கே உள்ள ஆடுகளின் மொத்த எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, சின்னசேலம் ஆட்டுப்பண்ணையின் மொத்த பரப்பளவு 1,866.50 ஏக்கர். அந்தப் பண்ணையில் மேச்சேரி செம்மறி ஆடுகள் 1,673-ம், ஜம்னுபாரி வெள்ளாடுகள் 19-ம் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அது அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. ஒழுங்குப் பிரச்னைகள்.

(அ) முதலமைச்சர் துறைகள் குறித்த வினாக்கள் எடுத்துக் கொள்ளப் பெறுதல்.

* திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஏறத்தாழ இரண்டாண்டு காலமாகவே ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் தங்களுடைய முக்கியமான கவனத்திற்கு ஒரு பிரச்னையை நான் கொண்டு வருகிறேன். தாங்களும் அதை கவனிப்ப தாகக் கூறுகிறீர்கள். ஆனல் என்ன காரணமோ, தாங்கள் கவனிக்கிறேன் என்று சொல்லியும் கூட அது இந்த அவையை அலட்சியப்படுத்துகிற அளவிற்கு நடந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று இருக்கும் துறைகள் : பொது நிர்வாகத்துறை, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, பாஸ்போர்ட், மதுவிலக்கு, லஞ்ச ஒழிப்பு, பெருந்தொழில்கள் உள்ளிட்ட தொழில்துறை, சுரங்கங்கள், கனிவளம்—இவ்வளவு துறைகள் வைத்துக்கொண் டிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு பல கேள்விகளை சட்ட மன்ற உறுப்பினர்கள் எழுப்பியிருக்கின்றனர். அதற்கு அவர்கள் பதில் அளிக்கவேண்டும். ஆனல் அவர் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் ஓரிரு கேள்விகளுக்குத் தான் இதுவரையில் பதில் அளித்து இருக்கிறார். வேறு எந்தக் கேள்விக்கும் பதில் அளிக்கவில்லை. என்ன காரணம், இந்த அவையை ஏன் இப்படி அலட்சியப்படுத்த வேண்டும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உணர்வுகளை நான் அறிகிறேன். முதலமைச்சர் சம்பந்தப்பட்ட கேள்விகள் வருகின்றன. அதற்கான பதில்களும் வந்துகொண்

1979 பிப்ரவரி 14] [பேரவைத் தலைவர்]

டிருக்கின்றன. நீங்கள் கேட்பதற்கு முன்னாலேயே நான் மாண்புமிகு முதலமைச்சரிடம் கேட்டேன். எனக்கும் இதில் அதிக அக்கறை இருக்கிறது. தான் டில்லிக்குப் போய் வந்த பிறகு ஒவ்வொரு நாளும் 5, 6 கேள்விகள் வீதம் போட்டு, முடித்து விடுகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தினந்தோறும் 5, 6 கேள்விகள் போடுங்கள். எல்லாக் கேள்விகளையும் முடித்துவிடுகிறேன் என்ற வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள்.

(ஆ) திரு. முருகையன் கொலை பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பெறுதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, ஒரு நாடாளு மன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜி. முருகையன் அவர்கள் படு கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். மேலவையில் அந்தச் சம்பவத்தைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள். இங்கே அதுபற்றி எழுத்து மூலமாகத் தீர்மானம் தந்தும் அதை அனுமதிக்காததற்கான இரகசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேலவையில் அனுமதித்தால் இங்கும் அனுமதிக்க வேண்டுமென்ற விதி ஏதாவது இருந்தால் அதைச் சுட்டிக் காட்டுங்கள். இந்த அவையைப் பொறுத்தவரையில் எது முக்கியம், எது அவசியம் என்று நான் கருதுகிறேனோ அதை எடுத்துக் கொள்வதும் மற்றதைத் தள்ளி விடுவதும் மரபாக இருக்கிறது. உறுப்பினர் முக்கியமான பிரச்சனை என்று கருதக்கூடிய ஒன்று எடுத்துக்கொள்ளப்பட வில்லை என்றால் என்னுடைய அறையில் வந்து அதன் முக்கியத்துவத்தை எடுத்துச்சொல்லி, என்னுடைய பதிலைத் தெரிந்துகொள்ள வேண்டுமே அல்லாமல் அதுபற்றி இந்த அவையிலே கேட்கக்கூடாது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, நேற்றே நான் கேட்டேன். கேட்காமலில்லை. மேலவை என்பது தமிழ்நாட்டுக் குள்ளேதான் இருக்கிறது. முதலமைச்சர் பதில் சொல்லியிருக் கிறார் ஒரே சுவருக்குள்ளே.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, நேற்றையதினம் சென்னையில் இருக்கிற பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அந்தப் பிரச்சனைக்கு வருகிறேன். அதற்குள் நீங்கள் அவசரப்பட வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் மேலவையில் பதில் சொன்னதைப்பற்றிச் சொன்னார்கள். மேலவையில் ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் மேலவைத்